மலேசியத் தமிழ் ஆய்விதழ்
Malaysian Journal of Tamil
eISSN: 2990-9694

# முல்லைநில மக்களின் வாழ்க்கையும் இக்கால மக்களின் வாழ்க்கையும்

# Comparing the Lifestyle of Mullai People in Ancient Literature with Today's Lifestyle of People

முழுமதி ரவிச்சந்திரன்/ Mulummathi Ravichandran[1]
[1]Undergraduate Student, Faculty of Languages and Communication, Sultan Idris Education University
Corresponding Email: mulummathi11@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

இவ்வாய்வின் முதன்மை நோக்கம் பண்டைய இலக்கியங்களில் முல்லைநில மக்களின் வாழ்க்கையும் இக்கால மக்களின் வாழ்க்கையும் ஆராய்வது ஆகும். இவ்வாய்வு நூலாய்வு அணுகுமுறை வழி கையாளப்பட்டுள்ளது. இவ்வாய்வில் முல்லைநில மக்களின் வாழ்க்கை முறைகளில், முல்லைநில மக்கள், தொழில்முறை, உணவுமுறை, வீடமைப்பு முறை ஆகியவை இன்றைய வாழ்க்கை முறையோடு ஒப்பிட்டு ஆராயப்பட்டுள்ளன. முல்லை நில மக்களைப் பல பெயர்கள் சொல்லி அடையாளப்படுத்துவது இவ்வாய்வின் மூலம் தெரியப்பட்டுள்ளது. தொழில்முறைகளில், இயற்கை தொழில்கள் செய்த முல்லைநில மக்களின் தன்மையை இன்றைய தொழில்முறைகளிலும் காணப்பட்டுள்ளது. உணவுமுறைகளில் முல்லைநில மக்களோடு எதிர்மறையாக உள்ளது இன்றைய உணவுமுறை என அறியப்பட்டுள்ளது. வீடமைப்பு முறைகளில் எளிமையாக வாழ்ந்த முல்லை நில மக்களுடன் பெரிதும் மாற்றம் கண்டுள்ளது இன்றைய வீடமைப்பு முறை. இளைய தலைமுறையினர் முல்லைநில மக்களின் வாழ்க்கை முறையையும் இன்றைய வாழ்க்கை முறையையும் அறிந்து கொள்ள வாய்ப்பாக அமைந்துள்ளது. இவ்வாய்வில் பண்டைய இலக்கியங்களில் முல்லை நில மக்களின் வாழ்க்கை முறையோடு இன்றைய மக்களின் வாழ்க்கை முறை வேறுபட்டுள்ளதை ஆய்வாளர் உறுதி செய்கின்றார்.

**கருச்சொற்கள்:** முல்லைநில மக்கள், வாழ்க்கை முறை, இன்றைய வாழ்க்கை, பண்டைய இலக்கியங்கள்

**Abstract**

The main purpose of this research is to compare the lifestyle of Mullai people with today's lifestyle. This study is designed in a comparative study approach and in this study, there are two approaches were used which are library work and internet. In this study, can get to know many factors of Mullai people's lifestyle such as their occupation, diet, housing, marriage, hospitality and so on had been compared with the present lifestyle now. It has been revealed through this study where the people of Mullai's land are identified by many names. Furthermore, Mullai people had been populated in natural industries where it also can be seen in today's professionals. It's been found that the diet method of Mullai people is totally different compare to today's diet. The way of housing also had changed a lot now where the Mullai people used to live in a very ordinary house. It's also known that the marriages have changed due to the changes of the time. Moreover, their hospitality is very special and it's also been decreased in today's lifestyle. The younger generation has the opportunities to learn more about the lifestyle of Mullai people and today's lifestyle too. As the conclusion, in this study the researcher confirms that in the ancient literature the lifestyle of Mullai people is differ from today's lifestyle of people.

**Keywords:** Mullai people, lifestyle, today's lifestyle, ancient literature, comparative, difference

**முன்னுரை**

முல்லை என்பது பண்டைய தமிழகத்தில் பகுத்து அறியப்பட்ட ஐவகைத் தமிழ் நிலத்திணைகளில் ஒன்றாகும். செம்மண் பரந்திருந்ததால் முல்லை நிலமானது செம்புலம் எனவும் அறியப்படுகிறது. இந்நிலம் முல்லை மலரைத் தழுவிப் பெயரிடப்பட்டது. காடும் காடு சார்ந்த பகுதியும் முல்லை நிலம் என்று கூறப்படும். மக்கள் இயற்கையோடு இயைந்த வாழ்க்கை வாழ்ந்து நாகரிகத்தை வளர்ப்பதற்கு ஏற்ற நிலப் பகுதி இதுவே ஆகும். மனிதன் நாகரிகம் பெற்று வளரத் தொடங்கியது முல்லை நிலத்திலேயே ஆகும். மக்கள் ஓர் இனமாய்க் கூடிச் சமுதாயமாய் அமைந்தது முதல் முதலில் முல்லை நிலத்திலாகும் (சதாசிவம், 2017).

**முந்தைய ஆய்வு**

'முல்லை நில இனக்குழு வாழ்க்கை முறை' (இராமராஜபாண்டியன்& கருப்பசாமி, 2019) என்ற ஆய்வுக் கட்டுரையில் முல்லை நில மக்களின் வாழ்க்கை முறையை ஆராயப்பட்டுள்ளது. மேலும், இந்த ஆய்வுக் கட்டுரையில் இனக்குழு வாழ்க்கை என்று முல்லைநிலச் சமூகத்தின் கூறுகளை ஆராய்ந்துள்ளனர். முல்லை நிலத்தில் வாழும் ஒரு குலத்தினரை ஆயர்களின் நிலை என்று ஆராய்ந்துள்ளனர். அதுமட்டுமன்றி, முல்லைநில மக்கள் விருந்தாளிகளை எப்படி உபசரிக்கிறார்கள் என்பதையும் ஆய்வாளர்கள் ஆராய்ந்துள்ளனர். மேலும், முல்லை நில மக்களின் தொழிலையும் அவர்களின் திருமணமுறையையும் ஆராய்ந்துள்ளனர். இவ்வாய்வுக் கட்டுரையில் முல்லைநில மக்களின் வாழ்க்கை முறையும் இன்றைய மக்களின் வாழ்க்கை முறையில் உள்ள வேறுபாட்டைக் காண முடிகிறது.

‘அகநானூற்றில் திணை அடிப்படையில் சூழலியல் உணவுகள்' (கல்பனா& சிவசங்கர், 2017) என்ற ஆய்வுக் கட்டுரையில் ஐந்திணை மக்களின் உணவுகள் ஆராயப்பட்டுள்ளன. அதிலும், முல்லைத் திணையில் சூழலியல் உணவுகள் என்று முல்லைநில மக்களின் பிரதான உணவுகளை ஆராய்ந்துள்ளனர். அடுத்து, ஸ்ரீதேவி(2020) அவர்கள், ‘குறிஞ்சி, முல்லைநிலப் பொதுமக்களின் புற வாழ்க்கை' என்ற ஆய்வுக் கட்டுரையில் முல்லை நில மக்களின் புறவாழ்க்கையை ஆய்ந்துள்ளார். முல்லைநில மக்களின் தொழிலையும் சான்றுகளுடன் ஆராய்ந்துள்ளார் ஆய்வாளர். மேலும், முல்லை நிலத்தில் வாழும் மக்களின் உணவுப் பழக்கங்களையும் முல்லைநில மக்கள் வாழ்ந்த குடில்களையும் இவ்வாய்வில் ஆராய்ந்துள்ளார். இந்த ஆய்வுக் கட்டுரையில் முல்லைநில மக்களின் புற வாழ்க்கை எளிமையானதாக இருப்பதை அறிய முடிகிறது.

## ஆய்வுக் கண்டுபிடிப்பு

### முல்லை நில மக்கள்

மனித வரலாற்றில் தொடக்கக் காலக் கட்டங்களில் மலைகளிலும், குகைகளிலும் வாழ்ந்த மனிதர்கள் மக்கள் தொகைப் பெருக்கத்தின் காரணமாக அடுத்துள்ள கானகப் பகுதியான முல்லை நிலத்திற்கு மக்கள் சென்றனர். இந்நிலத்தில் வாழ்கின்ற ஆண் மக்களை ஆயர்கள் என்றும் பெண் மக்களை ஆய்ச்சியர் என்றும் அழைப்பர்.

> "முல்லையாளர், கோவலர், இடையர்
> சொல்லிய வண்டர், பொதுவர், ஆன்வல்லோர்
> குடவர், பாலர், தொறும், கோவிந்தர்,
> அண்டர், கோபாலர், ஆயர், அமுதர் என்று
> இங்கிவைமுல்லை நிலத்தவர் பெயரே"

என்று திவாகர நிகண்டு கூறுகின்றது. அதுமட்டுமல்லாமல், தொல்காப்பியத்திலும், முல்லைநில மக்களின் பெயர்களைத் தொல்காப்பியர் இவ்வாறாகக் குறிப்பிட்டுள்ளார்.

> " ஆயர் வேட்டுவர் ஆடுஉத் திணைப்பெயர்
> ஆவயின் வரூஉம் கிழவரும் உளரே"
> (தொல். அகத்திணை நூ 23)

மேற்காணும் செய்யுள் அடிகள் வழியாக முல்லை நிலத்தில் ஆண்களை உணர்த்தும் திணைப்பெயர் ஆயர் எனவும் வேட்டுவர் எனவும் தொல்காப்பியர் கூறுகின்றார்.

### தொழில் முறை

ஆநிரை மேய்த்தல் அதாவது ஆடு, மாடுகளை மேய்க்கும் தொழிலாகும். முல்லை நிலத்தவரின் தலையாய தொழில்தான் ஆநிரை மேய்த்தல். இடையர்கள் ஆடுகளையும் மாடுகளையும் மேய்த்து அவற்றிலிருந்து வரும் பொருள்களையே வருமானமாகக் கொண்டனர். "இவர்களது முக்கியத் தொழில் ஆநிரை மேய்த்தல் ஆகும்" என்கிறார் (ஸ்ரீதேவி, 2020).

> "பறியுடைக் கையர் மறியினத்து ஒழிய
> பாலொடு வந்த கூழொடு பெயரும்
> ஆடுடை இடைமகன் சென்னிச்
> சூடிய எல்லாம் சிறுபசு முகையே" (குறு. 221:2-5)

இவ்வரிகளின் மூலம், ஆயர்கள் ஆடு மாடுகளில் இருந்து கிடைக்கப்படும் பாலைக் கொண்டு பொருள் ஈட்டியுள்ளது தெரிகிறது. ஆயர் குலப்பெண்கள் அதிகாலையிலேயே எழுந்து மோர் கடைந்து அருகில் குறுஞ்சி நிலத்து ஊர்களுக்குச் சென்று விற்பனை செய்வார்கள்

(மா. கலாமணி & கோபி, 2019). இதைத்தான் குறுந்தொகை 221 - இல் இவ்வாறாக குறிப்பிடுகின்றனர்.

“ பாலொடு வந்த கூழொடு பெயரும்
ஆடுடை இடைமான் சென்னி”

இன்றைய மக்களின் தொழில்முறை என்பது பெரிதும் மாற்றம் அடைந்தே உள்ளது. இன்றைய மக்கள் செய்யும் தொழில்முறைகளை ஐந்து நிலைத் தொழில்களாகப் பிரித்துள்ளனர். அதில் முதல் நிலைத்தொழிலாக இயற்கை வள ஆதாரங்களோடு நேரடியாக இணைந்து செயல்படுபவர்கள். இவர்கள் செய்யும் தொழில்முறையானது பழமையான தொழில்கள் என அழைக்கப்படுகிறது. உதாரணத் தொழில்கள், உணவு சேகரித்தல், வேட்டையாடுதல், வேளாண்மை, காடுகள் பராமரித்தல் போன்றவையாகும். தொடர்ந்து, இரண்டாம் நிலைத்தொழில் அதாவது, கட்டுமானத்துறையும் உற்பத்தித்துறையும் ஆகும். மூன்றாம் நிலைத்தொழிலாக வணிகம், தகவல் தொடர்பு சேகரித்தல், போக்குவரத்துப் போன்ற தொழில்முறைகளில் மக்கள் அதிகம் ஈடுபடுகின்றனர். நான்காம் நிலைத் தொழில்களிலும் இக்கால மக்கள் அதிகமாக ஈடுபடுவது தெரிகிறது. அதாவது, கல்வி, மருத்துவம், சட்டம், நிர்வாகம் போன்றவையாகும். (தௌபீக், 2020). ஆக, தொழில்முறையானது முல்லை நில மக்களின் தொழில் முறையை விட இன்றைய தொழில் முறை பெரிதும் மாற்றம் கண்டுள்ளதைக் காண முடிகிறது.

**உணவுமுறை**

முல்லை நில மக்கள் காடு சார்ந்த பகுதிகளில் வாழ்ந்து வந்ததால், அந்நிலத்தில் இயற்கையாய்க் கிடைக்கும் உணவுகள்தான் அவர்களின் பிரதான உணவாக இருந்தது. அதுமட்டுமன்றி, முல்லை நிலத்து மக்கள் சைவ அசைவ உணவுகளைத் தங்களுடைய உணவுப் பண்பாடாகக் கொண்டுள்ளனர். ஆடு மாடுகளைப் பராமரிப்பதால்; பால் சார்ந்த உணவுகளான பால்சோறு, மோர், தயிர் போன்ற உணவுகளை உண்டதைப் பெரும்பாணாற்றுப்படையில் காணமுடிகின்றது. இவ்வாறாக முந்தைய ஆய்வுகளிலும் பால், தயிர் சார்ந்த உணவு வகைகளையும் விரும்பி உண்டுள்ளனர் என்பது ஆய்களின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது (கல்பனா, 2017).

“புலிக்குரல் மத்தம் ஒலிப்ப வாங்கி
ஆம்பி வால்முகை அன்ன கூம்பு முகிழ்
உறைஅமை தீம்தயிர் கலக்கி நுரைதெரிந்து
புகர்வாய்க் குழிசி பூஞ்சுமட்டு இரீஇ
நாள்மோர் மாறும் நல்மா மேனி”

மேலும், முல்லை நில மக்களின் உணவுமுறைகளில் இயற்கை உணவான வரகு, கேழ்வரகு, சாமை போன்ற தானியங்களையும் இயற்கை நீரான முதிரையும் குறுஞ்சுனை நீரும் கான்யாற்று நீரும் உண்டு வந்தனர். தொடர்ந்து, முல்லை நிலம் காடு சார்ந்த

பகுதியானதால், பகலில் வேட்டுவர்கள் வேட்டையாடிய உடும்பு, முயல், ஈசல் முதலியவற்றைக் கள்ளுடன் உண்டதைக் கீழ்க்காணும் நற்றிணைப் பாடலில் காணலாம்.

"உடும்பு கொலீஇ வரி நுணல் அகழ்ந்து
நெடுங் கோட்டுப் புற்றத்து ஈயல் கெண்டி
எல்லு முயல் எறிந்த வேட்டுவன் சுவல
பல்வேறு பண்டத் தொடை மறந்து இல்லத்து
இரு மடைக் கள்ளின் இன் களிசெருக்கும்"

**வீடமைப்பு முறை**

முல்லை நில மக்கள் மிகவும் எளிமையான முறையிலேயே தங்கள் குடில்களை அமைத்துக் கொண்டுள்ளனர். இவர்கள் வரகுதாள், கேழ்வரகு தாள்களைக் கூரையாக வேய்ந்தார்கள். முல்லை நில மக்களின் வீடுகள், குறிஞ்சி நில மக்களின் வீடுகளைவிட நன்றாகவே இருந்தன. ஆட்டு மறிகள் தின்னக் கூடிய அளவிற்குத் தழைகளைக் கட்டியுள்ள குறுகிய கால்களைக் கொண்டது. அவற்றின் வெளியே கிடாத் தோலைப் பாயாகக் கொண்டு அவற்றில் துஞ்சும் காவலை உடையதாக இருப்பதைப் பெரும்பாணாற்றுப்படைப் பாடலில் காணலாம்.

"குளகு அரை யாத்த குறுங்கால் குரம்பைச்
செற்றை வாயில் செறிகழிக் கதவின்,
கற்றை வேய்ந்த கழித்தலைச் சாம்பின்,
அதளோன் துஞ்சுங் காப்பின் உதள,
நெடுந் தாம்பு தொடுத்த குறுந்தறி முன்றில்
கொடுமுகத் துருவையொடு வெள்ளை சேக்கும்
இடுமுள் வேலி எருப்படு உரைப்பின்".

இன்றைய மக்களின் வீடமைப்பு முறையானது நவீனக் காலத்திற்கு ஏற்பவே மாற்றம் கண்டு வருவதைக் காணலாம். தற்காலத்தில் வீடுகளின் வடிவமைப்பில் மேற்கத்தியப் பண்பாட்டுத் தாக்கங்கள் பெருமளவில் காணப்படுவதால் செயற்பாட்டுத் தேவைகளின் அடிப்படையிலான வடிவமைப்புகளில் பெருமளவு புதுமைகள் காணப்படுகின்றன. மூன்று படுக்கை அறைகள், வரவேற்பறை, சாப்பாட்டறை, குளியலறை போன்ற வசதிகள் இக்காலங்களில் கட்டப்படும் பெரும்பாலான வீடுகளில் முக்கியமான ஒன்றாக இருப்பதைக் காண முடிகிறது. இவ்வாறான வீடுகள் செங்கல், காங்கிறீட்டு, கூரை, ஓடுகள், உலோகம் போன்ற நீடித்துழைக்கக் கூடிய கட்டிடப் பொருள்களால் கட்டப்படுகின்றன.

**நிறைவுரை**

ஆய்வாளர் மேற்கொண்ட இவ்வாய்வு பண்டைய இலக்கியங்களில் முல்லைநில மக்களின் வாழ்க்கை முறையை இன்றைய வாழ்க்கை முறையோடு ஒப்பிட்டு ஆராய்தல் ஆகும். இவ்வாய்வின் வழி முல்லை நில மக்கள் வாழ்க்கை முறை இன்றைய வாழ்க்கை முறையோடு

பெரிதும் மாற்றம் கண்டுள்ளதைக் காண முடிகிறது. இம்மாற்றமானது எல்லாம் முறைகளிலுமே ஏற்பட்டுள்ளது எனலாம். இவ்வாறான வேறுபாடுகள் ஏற்படுவதற்கு முக்கியக் காரணமாக அமைவது கால மாற்றங்களே ஆகும். நவீன வளர்ச்சியாலும் மக்களின் வாழ்க்கை மாற்றம் கண்டுள்ளது எனலாம். அதுமட்டுமன்றி, இக்காலங்களின் நவீன வளர்ச்சியின் காரணமாக காடும் காடு சார்ந்த பகுதிகளை அழித்து நகரங்களாக மாற்றப்படுவதால் முல்லை நில மக்களின் வாழ்வியல் முறையும் குறைந்து விட்டது எனலாம்.

## துணைநூற்பட்டியல்


அருண் சின்னையா - சித்த மருத்துவர். தமிழர்களின் உணவு முறை விளக்கம். Mirrorarts.lK (https://tamil.mirrorarts.lk/life-art/105-food-and-beverage/1415-tamil-diet)

ஏ.ஜ.எம் தௌபீக். (2020, நவம்பர்). பெரும் சவாலாக மாறியுள்ள கால்நடை வள்ர்ப்பு தொழில். தினகரன்

தமிழ் டிப்ஸ். (2021, ஆகஸ்டு). துரித உணவு துரித முடிவு கட்டுரை. தமிழ் டிப்ஸ் (https://alltamiltips.com/%E0%AE%A4%E0%AF%81%E0%AE%B0%E0%AE%BF%E0%AE%A4

தமிழ் விர்ச்சுவல் யூனிவர்சிடி - Tamil Virtual University. இன்றைய தமிழர் நாகரிகம் : சில காட்சிகள். (http://www.tamilvu.org/courses/degree/c031/c0313/html/c03135l5.htm)

தம்பி. (2012, நவம்பர்). தவறான உணவுப் பழக்க வழக்கங்களை தவிர்த்துக் கொள்ளுங்கள். தமிழ் மிரர் ஆன்லைன் - tamil Mirror Online (https://www.tamilmirror.lk/%E0%AE%AE%E0%AE%B0%E0%AF%81%E0%AE%A4%E0%AF%8D%E0%AE%A4%E0%AF%81%E0%AE%B5%E0%AE%AE%E0%AF%8D/2012-11-19-14-35-04/142-53041)

மயிலை சீனி. வேங்கடசாமி (2008, பிப்ரவரி). சங்க கால மக்கள் வாழ்க்கை. செய்திமடல். (https://www.keetru.com/anaruna/feb08/mylaivenkatasamy.php)

மலாயா பல்கலைகழகம். (2016). தமிழ்ப் பேராய்வு ஆய்விதழ், தொகுதி - 4, University of Malaya Department of Indian Studies, Faculty of Arts and Social Sciences.

மு. வரதராசனர். (1955). முல்லைத்திணை. மதுரை தமிழ் இலக்கிய மிந்தொகுப்புத் திட்டம். (https://www.projectmadurai.org/pm_etexts/pdf/pm0339.pdf)

மு. ஜோதி. (2006). முல்லை நில மக்களின் தொழில்கள். முத்துக்கமலம். ISSN 2454 - 1990 (http://www.muthukamalam.com/essay/literature/p212.html)

முனைவர் அ.ஶ்ரீ தேவி (2020). ஆய்வு : குறிஞ்சி, முல்லை நிலப் பொது மக்களின் புற வாழ்க்கை. பதிவுகள், ISSN 1481 - 2991

முனைவர் சு.மேரி சுபா செல்வராணி (2019, டிசம்பர்). ஆய்வு : முல்லைப் பாட்டில் பண்பாட்டுப்பதிவுகள். உதித்தெழுந்தது அறிவெனும் இரவி. (https://iravie.com/%E0%AE%86%E0%AE%AF%E0%AF%8D%E0%AE%B5%E0%AF%81)

முனைவர் செம்மூதாய் சு. சதாசிவம். (2017). செப்புலம் விழுது 17. தாம்பரம் சென்னை - 600 063 ; செந்தமிழ் தட்டச்சு மையம்

முனைவர் செம்மூதாய் சு. சதாசிவம். (2017). செப்புலம் விழுது 18. தாம்பரம் சென்னை - 600 063 ; செந்தமிழ் தட்டச்சு மையம்

முனைவர் சோதி. (2020, செப்டம்பர்). முல்லை நில மக்களின் தொழில்கள். தமிழும் நயமும் (https://yarl.com/forum3/topic/246463%E0%AE%AE%E0%AF%81%E0%AE%B2%E0%AF%8D%E0%AE

முனைவர் மா. கலாமணி & கோபி. (2019). ஐந்திணைகளில் முல்லைத்திணையின் சிறப்பு. சான்லாகஸ். Vol, II 2454 - 3993 (http://www.shanlaxjournals.in/pdf/TS/V3N3/ts_v3_n3_i2_014.pdf)

வி. நாகசுந்தரம். (2012, செப்டம்பர்). முல்லை திணையும் மக்கள் வாழ்வும். தினமணி (https://www.dinamani.com/weekly-supplements/tamilmani/2009/nov/01/%E0%AE%AE%E0%AF%81%

வை. இராமராஜபாண்டியன் & க. கருப்பசாமி. (2019). முல்லை நில இனக்குழு வாழ்க்கை முறை. சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்.